# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL) – 2008 / 2009
## HELD IN AUGUST – 2009

## PHY 2.11 – MODERN WESTERN PHILOSOPHY

எவையேனும் **ஐந்து (05)** வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. நவீன மேலைத்தேய மெய்யியற் சிந்தனைகளின் பிரதான இயல்புகளைக் கூறி, அவை எவ்வாறு மத்திய கால மெய்யியற் சிந்தனைகளில் இருந்து வேறுபடுகின்றன என்பதனைச் சுருக்கமாக விளக்குக.

02. "அறிவை உறுதியான அடித்தளத்தில் நிலை நாட்ட மேலைத்தேய மெய்யியலாளர்கள் எத்தனித்தனர்." இக்கூற்றினை ஆராய்க.

03. உடல் - உளம் தொடர்பான டேக்காட்டின் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

04. "கடவுள் இப்பிரபஞ்சத்தினூடே உடலாகவும், உள்ளமாகவும் இருக்கின்றார்." ஸ்பினோசா இதனை எவ்வாறு விளக்குகின்றார்? ஆராய்க.

05. ஜோன் லொக்கின் மெய்யியல் சிந்தனை எவ்வடிப்படையில் அனுபவ முதல் வாதமாகின்றது என்பதனை அவருடைய அறிவாராய்ச்சியினூடாகத் தெளிவு படுத்துக.

06. "லைபினிட்ஸ் பன்மைவாதம் கூறும் ஒரு மெய்யியலாளர்" இதனை அவருடைய மொனாடுகள் பற்றிய கொள்கையூடாக தெளிவுபடுத்துக.

07. "டேவிட் ஹியூமின் சிந்தனைகள் அனுபவ முதல் வாதத்தின் அளவையியல் முடிவாகும்." இக்கூற்றினை நீர் ஏற்பீரா? நியாயம் தருக.

08. பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** குறிப்புகள் தருக.

    i) பார்க்ளியின் (Berkeley) சடப்பொருள் மறுப்புக் கொள்கை

    ii) இம்மானுவல் காண்டின் "புலச்சார்பற்ற தொகுப்புரைகள்"

    iii) ஹெகலின் முரணிலைத் தர்க்கம்

    iv) உடன் பிறந்த எண்ணங்கள்

*****